## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) ஒரு இலங்கை தமிழ் அகதிக்கு மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைக்காதது

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், சர்வதேச சட்ட விதிகளுக்குட்பட்டு, அகதிகளாக தமிழ்நாட்டில் வாழ்கின்ற அந்த மக்களுக்கான அனைத்துச் சலுகைகளையும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வழங்கியது. சமீப காலமாக, இலங்கை போன்ற பல்வேறு நாடுகளிலேயிருந்து புலம் பெயர்ந்து, முப்படைகளும் குண்டு மாரி பொழிகின்ற அந்தச் சூழ்நிலையில், தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு, வீடு, மனை, கோயில், குளங்கள் அத்தனையும் இழந்துவிட்டு, உடுத்திய உடையோடு இங்கு அகதிகளாக வருகின்ற அந்த மக்கள், இங்கே பல்வேறு துறைகளில், கூலி வேலைக்கும், கொத்தனார் வேலைக்கும் சென்று தங்கள் வாழ்க்கையை அனுபவிக்கின்ற அந்தச் சூழ்நிலையில், அவர்களுக்கான பல சலுகைகளை வழங்கியிருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்கள், அவர்களுடைய குழந்தைகள் பல்வேறு கல்லூரிகளில் படிப்பதற்கு, அகதிகளுக்கான இட ஒதுக்கீட்டு முறையைக் கடந்த கால ஆட்சியில் வழங்கினார்கள். ஆனால், நேற்றைய 'தினமணி'–யில் செய்தி; 'உதயராஜ் என்கிற ஒரு இலங்கைத் தமிழன், அகதி, 1173 மார்க்குகள் எடுத்தும், அவனுடைய எழுத்துத் தேர்விலே தேர்ச்சி பெற்றும்கூட, அகதிகளுக்கான இட ஒதுக்கீடு இல்லாத காரணத்தினால், அவனுக்குக் கிடைக்க வேண்டிய அந்த M.B.B.S. seat, இன்றைக்குத் தரப்படவில்லை என்கிற தலையங்கம், இன்றைக்கு 'தினமணி'–யில் செய்தியாக வந்திருக்கிறது. உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனுடைய வரிகள்

*"மாங்கொத்திகளும், மரக்கிளிகளும் கூடு திரும்ப தடையே இல்லை;*
*தமிழர்களான நாங்கள் மட்டும் நாடு திரும்ப முடியவில்லை"*

என்கிற வரிகளுக்கு ஏற்றவாறு, மிகப் பெரிய துயரத்தில் துவண்டு கொண்டிருக்கின்ற அந்தக் குடும்பங்களுடைய எதிர்காலத் தலைமுறையை வாழ வைப்பதற்கு, அந்தக் கல்வித் துறைகளில் இட ஒதுக்கீட்டை மீண்டும் வழங்குவதற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் முத்தமிழ் அறிஞருடைய அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 12

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்சினை உருக்கமானது என்பதை நான் உணர்கின்றேன். ஆனால், ஒரு விளக்கத்தை அவருக்கு நான் தர விரும்புகின்றேன். புலம் பெயர்ந்து, வேறு வழியில்லாமல், இலங்கையிலேயிருந்து வருகின்ற தமிழர்கள், இந்தியாவிலே தமிழகத்திலே தங்க வைக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு இப்போது 'இலங்கைத் தமிழர்கள்' என்ற பெயர்கூட இல்லை; 'அகதிகள்' என்ற பெயர் தமிழர்களுக்கு இன்றைக்கு; நினைத்துப் பார்க்கமுடியாத கொடுமைதான். இருந்தாலும், பல்லாயிரக்கணக்கிலே, இந்திய நாட்டினுடைய எல்லையோரங்களில், குறிப்பாகத் தமிழகத்திற்கு வந்து குடியமர்ந்திருக்கின்ற அவர்களுக்கு, தமிழக அரசு அன்று முதல், இன்று வரை ஏற்ற உதவிகளைச் செய்து வருகிறது.

*(முற்பகல் 10–15*

பல ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் அகதிகளாக இங்கு வந்தபோது, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இலங்கை அகதிகளுக்கு ஏற்ற உதவிகள் பலவற்றைச் செய்திருக்கின்றார். அதற்கு அடுத்து வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியானாலும் சரி, கடந்த காலத்திலே இருந்த அ.தி.மு.க. ஆட்சியானாலும் சரி, இலங்கைத் தமிழர்களை இங்கு அநாதைகளாக விட்டுவிடவில்லை. முடிந்தவரையிலே அவர்களுக்கு உதவிகளை வழங்கியே வந்திருக்கின்றோம். இப்பொழுதுகூட, இலங்கையிலேயிருந்து வந்துள்ள அகதிகள் எப்படி வாழ்கிறார்கள், அவர்களுடைய நலன்கள் முறையாகக் காக்கப்படுகிறதா, சுகாதார வசதிகள் அமைந்துள்ள இடங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்களா என்பதையெல்லாம் அறிந்து ஆவன செய்ய அரசுக்கு, குறிப்பாக எனக்குத் தகவல் தர நம்முடைய அமைச்சர்கள் இருவரை அந்தப் பகுதிகளுக்கு அனுப்பி வைத்தேன். அவர்கள் அந்தப் பகுதிகளுக்குச் சென்று, நிலைமைகளை எடுத்துரைத்து மத்திய அரசின் சார்பாக அந்த அகதிகளுக்கு, மன்னிக்க வேண்டும், அந்தத் தோழர்களுக்கு மாதம் 200 ரூபாய் வழங்கப்படுகிறது, அது போதுமானதாக இல்லை என்று என்னிடத்திலே சொன்னார்கள். மத்திய அரசுக்கு எழுதி கேட்டு அவர்கள் அந்தத் தொகையை அதிகப்படுத்தித் தருவதற்குமுன்பு, நாமே அந்த முயற்சியிலே ஈடுபடுவோம் என்று மாநில அரசின் சார்பாக மேலும் ஒரு 200 ரூபாய் அவர்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறே வழங்கப்படுகிறது.

ஏற்கெனவே அவர்களுடைய சிறார்களுடைய, மாணவர்களுடைய படிப்புப் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஏற்கெனவே அவர்கள் இங்கே மருத்துவக் கல்லூரி வரையிலே சேர்ந்து படிப்பதற்கான வசதிகள் எல்லாம் கடந்த காலத்திலே இங்கே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அப்போது இருந்தபோதும் சரி, எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சி இருந்தபோதிலும் சரி, அவர்களுக்கு வழங்கப்பட்டது. இடையிலே என்ன காரணத்தினாலோ–நான் யார்மீதும் குற்றம் சொல்ல விரும்பவில்லை–அல்லது நீதிமன்றத்திலே அளிக்கப்பட்ட ஒரு உத்தரவினாலோ என்னவோ, இடையிலே அந்த மாணவர்கள் போதுமான கல்வி அறிவைப் பெறமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைப்பற்றியும் என்னிடத்திலே இலங்கைத் தமிழர்களுக்காக வாதாடக்கூடிய சிலர் தமிழகத்திலே இருக்கிறார்கள். சந்திரஹாசனைப் போன்றவர்கள், திரு. செல்வா அவர்களுடைய மைந்தர் மற்றும் சிலர் என்னைச் சந்தித்து, அதைப்பற்றிப் பேசியிருக்கின்றார்கள். இதை ஒரே வரி உத்தரவிலே நிறைவேற்றிவிடுவது என்பது இன்று உள்ள சூழ்நிலையிலே இயலாத காரியம். எனவே, அந்த மாணவர்களுக்கு கல்விச் செல்வத்தையும் பெறுவதற்கு எப்படி வழி காணலாம் என்பதைப்பற்றி மத்திய அரசோடு விவாதித்து, ஆவன செய்யப்படும் என்பதையும் திரு. வேல்முருகன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. உரிமை மீறல் பிரச்சினை–தொடர்ச்சி

**(ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பெற்றது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பரஞ்ஜோதி.

***திரு. மு. பரஞ்ஜோதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையினுடைய உரிமைகளை மீறியதன் காரணமாக சட்டப் பேரவையினுடைய செயலாளர்மீது பேரவை விதி 220–ன்கீழ் நான் உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வருகின்றேன். இந்த மாதம் 2 ஆம் தேதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு டாக்டர் தம்பிதுரை அவர்கள் சட்டப் பேரவைத் தலைவர்மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை விதி 68–ன்கீழ் கொண்டு வந்தார்கள்.

*(முற்பகல் 10–20*

அப்படிக் கொண்டு வருகின்ற நேரத்தில், அதை இந்த அவை, 14 நாட்கள் முடிந்ததற்குப் பிறகுதான், நிகழ்ச்சி நிரலிலே சேர்க்க வேண்டும்.